# தமிழ்நாடு அரசு
## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
## வட்டாட்சியர் அலுவலகம், சிவகிரி, தென்காசி மாவட்டம்.

அறிவிக்கை எண்/988/2025-A4

நாள்: 12.07.2025

தென்காசி மாவட்ட வருவாய் அலகு, சிவகிரி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்கள் கீழ்க்கண்ட விபரப்படி உயர்திரு சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் ஆணையின்படி நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களின் உரிய கல்வித்தகுதி, படித்தல் மற்றும் எழுதுதல் திறனறிவுத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வு ஆகியவை மூலமாக நிரப்பப்பட உள்ளன. எனவே கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 14.07.2025 |
| 2 | விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 12.08.2025 |
| 3 | எழுதுதல் திறனறித்தேர்வு நடைபெறும் நாள் | 17.09.2025 முதல் 23.09.2025 வரை (மாறுதலுக்குட்பட்டது) |
| 4 | நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 09.10.2025 முதல் 15.10.2025 வரை |

**பணி விவரம்**

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் – Level 06 (ரூ.11,100–ரூ.35,100) |
| வட்டத்தின் பெயர் | சிவகிரி |

**காலிப்பணியிடங்களின் விவரம்**

| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம் |
|---|---|
| 03 | 1. நெ.15. பட்டக்குறிச்சி |
| | 2. நெ.05. இராயகிரி பாகம் 2 |
| | 3. நெ.01. விஸ்வநாதபேரி பாகம் 1 |

**இன சுழற்சி விவரம்**

| வ. எண் | இன சுழற்சி | கிராமத்தின் பெயர் | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமை அற்றவர் | பொது ஆண் / பெண் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 19 | பட்டக்குறிச்சி | பொதுப் பிரிவினர் | முன்னுரிமை அற்றவர் | பெண் | தமிழ் வழிக்கல்வி |
| 02 | 20 | இராயகிரி பாகம் 2 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை | பொது | |
| 03 | 21 | விஸ்வநாதபேரி பாகம் 1 | பொதுப் பிரிவினர் | முன்னுரிமை | பொது | – |

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:**

● இருப்பிடச் சான்று ஒளிநகல் ● சாதிச்சான்று ஒளிநகல் ● வேலைவாய்ப்பு பதிவு அட்டை ஒளிநகல் ● ஆதார் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஒளிநகல்கள் ● பள்ளி மாற்றுச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகுதி சான்று ஒளிநகல்கள் ● பிறப்பு சான்று ● ஆதரவற்ற விதவையாக இருப்பின் சான்று ● மாற்றுத்திறனாளியாக இருப்பின் அதற்குரிய அடையாள அட்டை நகல் ● முன்னாள் இராணுவத்தினராக இருந்தால் அடையாளஅட்டை நகல். ● இரு சக்கர, நான்கு சக்கர வாகன ஓட்டுனர் உரிமம் நகல் (01.07.2025 –க்குள் முந்தையது) ● விண்ணப்பதாரர் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்–3

**கிராம உதவியாளர் பணி நியமனத்திற்கு கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.**

**கல்வித்தகுதி:** தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதி தேர்ச்சி/தோல்வி அடைந்திருக்க வேண்டும். (குறிப்பு: (SSLC Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

<u>இதர தகுதிகள்:</u> ● விண்ணப்பதாரர் சிவகிரி வட்டத்தை சேர்ந்தவராகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருத்தல் வேண்டும். ● தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். ● காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். ● உடற்தகுதி சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். ● தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ அல்லது மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்க கூடாது. ● சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். ● விண்ணப்பத்துடன் அனைத்து சான்றுகளின் சான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும். எந்தவித குற்றவழக்கிலும் ஈடுபடாதவராக இருக்க வேண்டும். ● விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்திற்காக எவ்வித சிபாரிசும் நாடக்கூடாது. எவ்வகையிலாவது சிபாரிசு செய்வது தெரியவரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

<u>வயது வரம்பு:</u> ● அறிவிக்கை நாளன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். ● அதிகபட்சம் – இதர வகுப்பினர் 32 வயது. ● பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் / பட்டியலினத்தர் / பழங்குடியினர் –37 வயது (அரசாணை (நிலை) எண் 91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021 –இன் படி)

முன்னாள் இராணுவத்தினர்: இதர வகுப்பினர் 48 ஆண்டுகள் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் பட்டியலினத்தவர் / பழங்குடியினர் –53 ஆண்டுகள் (Tamil Nadu Govt Servants |(Conditions of Service) Act –2016)

மாற்றுத்திறனாளிகள்: நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் விதித்தளர்வு ( Tamil Nadu) |Govt Servants (Conditions of Service) Act – 2016)

**விண்ணப்பிக்கும் முறை**

● விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்காக விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளித்து விண்ணப்பிக்கலாம். ● மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவங்களை https://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியை அணுகி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வட்டாட்சியர்**
**சிவகிரி**

Scanned with OKEN Scanner